**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR**
**DEPOSITION OF WITNESS**

**OS.No. 98/2023 நாள் 14.10.2024**

**DW2 – செல்வராசன்**

**குறுக்கு விசாரணை**

நான் B.Tech படித்துள்ளேன். Priest University- ல் படித்தேன். வாதி ராஜகாந்தன் எனக்கு உறவினர். மதிமாறனை எனக்கு தெரியும். ராஜகாந்தன் எனது அம்மா வழி தூரத்து உறவினர். பிரதிவாதி 03.08.2020 ல் ரூ.15,00,000/- பணம் எனது உறவினர் ராஜகாந்தனிடமிருந்து வாங்கினார். பணம் கொடுக்கும் போது நான்,, விவேக், ராஜகாந்தன் மற்றும் மதிமாறன் ஆகியோர் இருந்தோம். இந்த 4 பேரையும் தவிர வேறு யாரும் இல்லை. எனது தகப்பனார் பெயர் பாலகுமார். வாசாஆ.1ல் மேலே காண்பிக்கப்பட்டும் என்ற இடத்தில் உள்ள கையெழுத்தும் பூர்த்தி செய்யப்பட்ட கையெழுத்தும் வெவ்வேறாக உள்ளது என்றால் அது ஆங்கிலத்தில் உள்ளது இது தமிழில் உள்ளது. இரண்டையும் நான் தான் எழுதினேன். முதல் சாட்சி விவேக்கை எனக்கு தெரியும். விவேக்கின் கையெழுத்து வேறு மையில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி கையெழுத்து போட்டுள்ள மையும் வேறுதான் என்றால் சரிதான். சட்டப்படியான பணபரிவர்த்தனையில் ரொக்கமாக ரூ.2,00,000/-க்கு மேல் கொடுக்கக்கூடாது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். ராஜகாந்தனிடம் கொடுத்த ரூபாய் நோட்டுகள் ரூ.500 நோட்டுகள் மொத்தம் 30 நோட்டுகள். எனது உறவினர் பைனான்ஸ் தொழில் செய்வதற்காக பதிவு செய்துள்ளாரா என்றால் இல்லை. நன்பர் என்பதால் கொடுத்தார். கையெழுத்து போடும் போது பணத்தின் உண்மை தன்மை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அவர் வீடு கட்டுவதற்காக பணம் கேட்டார். வாதசாஆ.1ல் ரூ.1,00,000/- 2 சதவீதம் வட்டிவீதம் என்று உள்ளது என்றால் சரிதான். 2023ல் வாதி பிரதிவாதியை வீட்டில் போய் மிரட்டியது சம்பந்தமாக புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதியும் வாதியும் நெருங்கிய நன்பர்கள் என்றால் சரிதான். எனக்கு வயது 31. வாதிக்கு தோராயமாக 46 வயது இருக்கும். வாதசாஆ.2ல் நான் இரண்டாம் சாட்சி. பரிவர்த்தனை எங்கு நடந்தது என்றால் ராஜகாந்தன் வீட்டில் நடந்தது. வாதியிடமிருந்து எந்த பணமும் வாங்கவில்லை என்றும் நான் அவரது உறவினர் என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்த கையெழுத்தும் போடவில்லை என்றும் நாங்கள் எல்லோரும் சேர்ந்து இந்த கையெழுத்தை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.